JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**D.V.C.6/2016**

**Respondent present.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) the day of 10.07.2026

**P.W.1 Name: சுஜாதா W/o. துணைசேகர்**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) நான் குடியிருப்பது 32/97 கொண்டையன்காட்டு வலசு, காஞ்சிக்கோவில், பெருந்துறை என்றால் சரியல்ல. நான் மேற்படி முகவரியில் தான் குடியிருக்கிறேன், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய ஆதார் அட்டையில் மேற்படி முகவரி தான் உள்ளது என்றும், அதனால் தான் எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்து ஆதார்அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் ஆதார் அட்டை இல்லை. மேற்படி முகவரி எனது 2வது கணவர் செந்தில் குமாரின் முகவரி என்றால் சரியல்ல.

2) என்னிடம் காட்டப்படும் பிறப்பு சான்றிதழில் உள்ள சுஜாதா செந்தில்குமார் என்பது என்னுடைய பெயர் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்ததற்கான டிஸ்சார்ஜ் சம்மரி சுதா மருத்துவமனையிலிருந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. அந்த நபர் யார் என்றும் எனக்கு தெரியாது, அது என்னுடையது அல்ல.

3) நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், 02.05.2018ம் தேதி எனக்கு  நிமன்நேகன் என்ற ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளது என்றால் சரியல்ல. நான் வேறு ஒரு திருமணம் செய்து கொண்டதால் சட்டப்படி இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை